(vi) போட்டி பரீட்சையில் சித்திப்பெற்று பயிற்சியை முடித்து தற்சமயம் தொழிலுக்கு சேர்த்துக்கொள்ளப்படாதவர்களுக்கு நியமனம் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(vii) ஆட்சேர்ப்பு படிமுறைக்கு புறம்பாக அளவை வெளிக்கள உதவியாளர் பதவிக்கு சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(viii) போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து பயிற்சிக்காகத் தெரிவுசெய்யப்படாத விண்ணப்பதாரர்கள் தொடர்பாக திணைக்களம் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1424/ '18

கௌரவ மயந்த திசாநாயக்க,— சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வறுமையை ஒழிக்கும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்ட திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக உத்தேச நோக்கங்கள் எந்தளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) திவிநெகும பயன்களுக்காக (சமுர்த்தி நிவாரண உதவி) வருடாந்தம் செலவாகின்ற தொகை யாது என்பதையும்;

(iii) தற்போது திவிநெகும பயன்கள் கிடைக்காத போதும் மேற்படி பயன்களை எதிர்பார்த்து இருக்கின்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த காலத்தில் திநிநெகும பயனாளிகள் பக்கச்சார்பற்ற விதத்தில் தெரிவு செய்யப்பட்டதாக திருப்தியடைகின்றாரா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்காகப் பின்பற்றப்படுகின்ற புதிய முறையியல் யாது என்பதையும்;

(iii) திவிநெகும அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iv) ஆமெனில், எதிர்காலத்தில் அவ்வாறான செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கை யாது என்பதையும்;

(v) திவிநெகும நிதியம் அண்மையில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்திற்கு அமைய கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1436/ '18

கௌரவ அ. அரவிந்த் குமார்,— நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சிலும் தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையிலும் பணியாற்றும் பதவியணி உத்தியோகத்தர்கள் 2010 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை கடமைத் தேவைகளின் பொருட்டும் உலக வங்கி உதவி உள்ளிட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளின் கீழுள்ள கருத்திட்டங்கள் தொடர்பாகவும் வெளிநாட்டிற்கு சென்ற சந்தர்ப்பங்கள் எத்தனை என்பதையும்;

(ii) அவ்வாறான ஒவ்வொரு உத்தியோகத்தர்களினதும் பெயர், பதவி, விஜயம் செய்த நாடு, விஜயத்தின் நோக்கம், விஜயத்தின் கால அளவு, விஜயத்திற்கான மொத்த செலவினம் (விமானப் பயணச்சீட்டுக் கட்டணம், வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்) மற்றும் அதற்கான நிதியத்தினை வழங்கிய உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1533/ '18

கௌரவ ஈ. சரவணபவன்,— மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வட மாகாணத்தைச் சேர்ந்த தொண்ணூறாயிரம் பெண் தலைமைத்துவ குடும்பங்களில் வீடமைப்பு மற்றும் வாழ்வாதார வசதிகள் கிடைத்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி தொண்ணூறாயிரம் குடும்பங்களில் அங்கவீனமுற்றவர்கள், முள்ளந்தண்டு பாதித்தோர் மற்றும் முதியவர்களுக்கு எவ்வாறான உதவிகள் அரசினால் வழங்கப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி (i) மற்றும் (ii) என்பவற்றில் உதவிகள் வழங்கப்பட்ட ஆண்டு, திகதி மற்றும் உதவிகள் பற்றிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களின் வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டத்திற்குள் மறுமலர்ச்சி மற்றும் உதவித் திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வாறான உதவிகள் வழங்கப்பட்ட திகதிகள் மற்றும் வழங்கப்பட்ட உதவிகள் பற்றிய விபரமொன்றை சமர்ப்பிப்பார என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2018 திசெம்பர் 04, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

17/ ' 18

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கண்டி மாவட்டத்திலுள்ள வரையறுக்கப்பட்ட லங்கா சதொச கிளைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்தக் கிளைகளின் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) 2010ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை மேற்படி சதொச கிளைகளில் சேவையாற்றுவதற்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆட்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பதவிப் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஆட்சேர்ப்புக்காக பின்பற்றப்பட்ட முறையியல் யாது என்பதையும்;

(v) கண்டி மாவட்டத்தில் லங்கா சதொச கிளை வலையமைப்பை விஸ்தரிப்பதற்காக அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

58/ '18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட பிரேரணை இலக்கம் 209 இன் பிரகாரம், அம்பாந்தோட்டை துறைமுகம் ஊடாக செல்கின்ற கடல் மார்க்கத்தை வருடாந்தம் 4,500 எண்ணெய்க் கப்பல்கள் உட்பட 35,0000 கப்பல்கள் பயன்படுத்துவதாக குறிப்பிட்டு, ஆழ்கடலில் எண்ணெய் வழங்கும் பணியில் பிரவேசிப்பதற்கு தனியார் துறையினர் ஊக்குவிக்கப்படுமென முன்மொழியப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி முன்மொழிவை நடைமுறையில் யதார்த்தமாக்க இதுவரை மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி முன்மொழிவின் பிரகாரம், மேற்படி பணிக்கான உரிமப்பத்திரம் வழங்க வெளிப்படைத் தன்மையுடன்கூடிய விலை கேட்பு முறையியலொன்று பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(iv) அதன் பிரகாரம், ஆழ்கடலில் எண்ணெய் வழங்க உரிமப்பத்திரம் பெற்றுக்கொண்ட தரப்பினர்கள் யாரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

137/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கலேவெல பிரதேசத்தில் இஹல லிக்கல எனும் பெயரில் கிராமமொன்று உள்ளதென்பதையும்;

(ii) இக்கிராமத்தில் பெரும்பான்மையான குடும்பங்கள் செங்கல் தயாரித்து வாழ்க்கையை கொண்டுநடாத்துகின்றனர் என்பதையும்;

(iii) நிலவுகின்ற கடும் வறட்சி, மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் போக்குவரத்துக் கட்டணம் அதிகரித்தல் ஆகியன காரணமாக தற்போது இக்கிராமத்தின் மக்கள் மேற்படி கைத்தொழிலை மேற்கொள்வதில் கடும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி கிராமத்தில் வாழ்கின்ற மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அமைச்சு எடுக்கின்ற நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

179/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012.11.10 ஆம் திகதி வெலிகடை சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக ஆராய அப்போதைய விடயப்பொறுப்பு அமைச்சரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டதா;

(ii) அவ்வாறெனின் அத் திகதி யாது;

(iii) அவ்வாறெனின் அக் குழுவின் உறுப்பினர்கள் யார்;

(iv) அந்த அறிக்கை அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்ட திகதி யாது;

(v) அந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள சிபாரிசுகள் யாவை;

(vi) அந்த சிபாரிசுகள் நடமுறைப்படுத்தப்பட்டுள்ளதா;

(vii) அந்த முழுமையான அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படுமா;

என்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

209/ '18

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015.09.01 ஆம் திகதி தொடக்கம் 2017.07.31 ஆம் திகதி வரை சனாதிபதி, பிரதம அமைச்சர், சபாநாயகர் மற்றும் அமைச்சர்களுடன் மேற்கொண்ட வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் உள்ளடங்கலாக ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் மேற்கொண்ட உத்தியோகபூர்வ வெளிநாட்டு சுற்றுப்பயணங்களின் எண்ணிக்கையை இறங்குவரிசைக் கிரமத்திற்கேற்ப அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

289/ ' 18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான காலத்தினுள் இலங்கை இராணுவத்திற்கு, உணவின் பொருட்டு இறைச்சி வகைகளை வழங்கிய வழங்குநர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) இராணுவத்திற்கு இறைச்சி வகைகளை வழங்கும் வழங்குநர்கள் தெரிவு செய்யப்படும் விதம் யாது என்பதையும்;

(iii) இக்காலப்பகுதியில் ஒவ்வோர் இறைச்சி வகைக்குமென ஆண்டுதோறும் செலுத்தப்பட்ட பணத்தொகை தனித்தனியாக யாது என்பதையும்;

(iv) அதற்கென மேலும் செலுத்த வேண்டியுள்ள பணத்தொகை யாது என்பதையும்;

(v) மேற்படி இறைச்சி வகை ஒவ்வொன்றினதும் வருடாந்த தேவைப்பாடு தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

395/ '18

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை சனாதிபதியின் பணியாட்டொகுதிக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள இணைப்புச் செயலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2016.01.02 ஆம் திகதி முதல் இன்றைய சனாதிபதியின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள இணைப்புச் செயலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி இணைப்புச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ள துறைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு இணைப்புச் செயலாளரின் பெயர், கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) இணைப்புச் செயலாளரொருவருக்கு செலுத்தப்படுகின்ற சம்பளம் எவ்வளவென்பதையும்;

(iii) அதற்கமைய கடந்த இரண்டு ஆண்டுகளினுள் மேற்படி இணைப்புச் செயலாளர்களுக்காக ஏற்கப்பட்டுள்ள மொத்த செலவினம் எவ்வளவென்பதையும்;

(iv) இச் செலவினத்துக்கு ஒப்பீட்டளவில் மேற்படி இணைப்புச் செயலாளர்கள் போதுமான அளவு கடமையை நிறைவேற்றியுள்ளனரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

468/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தற்போது இலங்கை கல்வி நிருவாக சேவையில் ஈடுபட்டுள்ள மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அந்த உத்தியோகத்தர்களின் பெயர்கள், பதவிப் பெயர்கள், சேவை புரியும் இடங்கள் ஆகியன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) தற்போது இலங்கை கல்வி நிருவாகச் சேவையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்கள் நிலவும் சேவை நிலையங்கள் யாவையென்பதையும்;

(iv) அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சு போட்டிப் பரீட்சைகளை நடத்தியுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(vi) இவர்களுக்கு நியமனம் வழங்க எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2018 திசெம்பர் 05, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

59/ '18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் 210 ஆம் பிரேரணையின் பிரகாரம் கப்பல் கட்டுதல் மற்றும் பாகங்களாக கழற்றும் கைத்தொழிலையும் மற்றும் கப்பல் திருத்துதலையும் ஊக்குவிப்பதற்கு அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை பிரதேசங்களில் அரச காணிகளை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மாவட்ட செயலாளரினால் தயாரிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிக்கைக்கேற்ப அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள அரச காணிகளின் அளவு எத்தனை ஹெக்டயார்கள் என்பதையும்;

(iii) அரசாங்கத்தினால் இனங்காணப்பட்டுள்ள, அரசுக்குச் சொந்தமான மேற்படி காணிகளில் பயனுறுதிமிக்க வகையில் உபயோகிக்கப்பட்டுள்ள மற்றும் உபயோகிக்கப்படாத காணிகளின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் 210 ஆம் இலக்க பிரேரணைக்கேற்ப பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளின் அளவு மற்றும் அவை யாருக்கு எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

227/ '18

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— சமூக வலுவூட்டல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டம் இலங்கையின் மிகவும் வறிய மாவட்டம் என்பதையும்;

(ii) இந்த மாவட்டத்தில் ஏறக்குறைய 23,057 நலன்பெறுனர்கள் சமுர்த்தி மானியம் பெறுவதற்கான தகைமை பெறுவதாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், இற்றைவரை 11,111 நலன்பெறுனர்களுக்கு மாத்திரமே மானியம் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) 2013 ஆம் ஆண்டில் சமுர்த்தி நலன்பெறுனர்களை தெரிவுசெய்கையில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 10 கிராம அலுவலர் பிரிவுகளிலும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவைச்சேர்ந்த 13 கிராம அலுவலர் பிரிவுகளிலும் மீளக்குடியமர்த்துவதற்காக அனுமதி கிடைக்கவில்லை என்பதால் மேற்படி 23 கிராம அலுவலர் பிரிவுகளிலுமிருந்து எந்தவொரு நலன்பெறுனரும் தெரிவுசெய்யப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த நிலைமையில் சமுர்த்தி மானியங்களை பெறுவதற்காக தற்போது இனங்காணப்பட்டுள்ள நலன்பெறுனர்களில் எஞ்சியுள்ள 11,946 நலன் பெறுனர்களுக்கு சமுர்த்தி மானியம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(ii) மேலே குறிப்பிட்ட கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுகளின் கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள சமுர்த்தி நலன்பெறுனர்களின் நிலைமை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

290/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் கொடக்கவெல, வேரஹெர நீர் விநியோகத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் அது இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அக் காரணத்தினால் அப் பிரதேச மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) திட்டமிட்டவாறு அத் திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன் நிர்மாணப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படுமென்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

414/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொணறாகலை மாவட்டத்தில் சேவையாற்றுகின்ற அதிபர்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு வலயக் கல்வி அலுவலக அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(ii) 2015 சனவரி 08 ஆம் திகதியின் பின்னர் மேற்படி அதிபர்கள் அல்லது அதிபர் சேவையில் இல்லாதோருக்கு அதிபர் சேவையில் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள ஆட்கள் மத்தியில் அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளானவர்கள் உள்ளனரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

442/ '18

கௌரவ ஜயந்த சமரவீர,— நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2017.05.27 ஆம் திகதி ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக புலத்சிங்கள பிரதேச செயலாளர் பிரிவின் பொலேகொடயிலிருந்து இஹல வெல்கம வரை செல்கின்ற வீதியில் 1 ஆம் கட்டை எனும் பிரதேசம் மண்சரிவுக்கு உள்ளாகியமையின் மூலம் தற்போது அவ்வீதியை பயன்படுத்துவதற்கு இயலாததொரு நிலை தோன்றியுள்ளதென்பதையும்;

(ii) இந்நிலைமை காரணமாக மேற்படி வீதியை பயன்படுத்திய இலக்கம் 819G முதுன, 819H கமகேவத்த, 824 தென்னஹேன மற்றும் 825 இஹல வெல்கம ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் அமைந்துள்ள ஓமத்த குடியேற்றம், ஓமத்த கொலனி, கம்பலகந்த, வவுலாகந்த, முதுன, பட்டேகல்ல, தென்ஹேன, சமகிபுர, இஹல வெல்கம, கல்லனமுல்ல, ஹேன்யாய மற்றும் அட்டஹவுல்ஹேன ஆகிய பிரதேசங்களில் 10,000 - 15,000 இற்கு இடைப்பட்ட மக்கள் பாரிய இன்னலுக்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதையும்;

(iii) இந்த வீதியை சீரமைப்பதற்கு தற்போது எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பயன்படுத்த முடியாத அளவிற்கு சேதமடைந்துள்ள மேற்படி வீதியை துரிதமாக மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் காலப்பகுதி மற்றும் நிறைவுசெய்யும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

495/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஊவா மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் கட்டுப்பாட்டின் கீழ் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இன்றளவில் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் கடமையாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அங்கு இன்றளவில் கடமையாற்றும் அலுவலர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) ஊவா மாகாணத்தின் தற்போதைய முதலமைச்சர் அப்பதவிக்குத் நியமிக்கப்பட்டதன் பின்னர், இற்றைவரை குறித்த அதிகாரசபையில் வழங்கப்பட்டுள்ள தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கை மற்றும் அந்த தொழில்பெறுநர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(v) தற்போதைய முதலமைச்சர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் வழங்கியுள்ள பஸ் வண்டி அனுமதிப்பத்திரங்கள் (Permits) மற்றும் அந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வீதிகள் மற்றும் நபர்களின் பெயர்கள் தனித்தனியாக யாது என்பதையும்;

(vi) அதற்கென பின்பற்றப்பட்ட முறையியல் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

520/ '18

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் மதுவரி வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டில் புகையிலை மற்றும் சிகரட் உற்பத்தி மீது விதிக்கப்பட்ட வரியின் மூலம் ஈட்டிக்கொண்ட வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(iii) கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், மேற்படி (i) மற்றும் (ii) இன் வருமானம் முறையே ரூபா மில்லியன்களில் எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2016 ஆம் ஆண்டு மோல்ட் மதுசார உற்பத்தி எத்தனை லீற்றர்கள் என்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டுக்காக மதுசார உற்பத்தியை புதிதாக ஆரம்பிப்பதற்கு கம்பனிகளுக்கு புதிய உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறான உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் அக்கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மதுவரிச் சட்டத்தின் கீழ் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான தத்துவமுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும் அதற்கான அதிகார தத்துவம் யாருக்கு உள்ளதென்பதையும்;

(ii) கைப்பற்றப்படுகின்ற சட்டவிரோதமான மதுபானம் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு யாருக்கு அதிகார தத்துவம் உள்ளதென்பதையும்;

(iii) அவர்களின் கடமைப்பொறுப்பு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

530/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நாட்டின் மொத்த வரிகளில் 57% இலங்கை சுங்கத்தினால் அறவிடப்படுகின்றதென்பதையும்;

(ii) இதில் அதிக வரி வீதம் வாகன இறக்குமதி வரியாகும் என்பதையும்;

(iii) வரி செலுத்தாமலிருப்பதற்கு வாகன இறக்குமதியாளர்கள் பலவித உபாயங்களை பயன்படுத்துகின்றனர் என்பதையும்;

(iv) ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களுக்கு மேலதிகமாக, 2015.02.10 ஆம் திகதிய 1901/3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலினூடாகவும், இந்நிலைமையைத் தவிர்ப்பதற்கான கட்டளைகள் விதிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) எவ்வாறாயினும், 2015.09.22 ஆம் திகதிய 1933/6 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தீய வர்த்தகர்களுக்கு விரும்பியவாறு நடந்துகொள்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) (அ) (iv) இல் குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரத்தின் பேரில் சுங்க அதிகாரிகளினால் வெளிப்படுத்தப்பட்ட விலை குறைவாகக் குறிப்பிடப்பட்ட 1000 வாகனங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டால், ரூபா 8000 மில்லியனுக்கு அதிகமான வருமானத்தை அறவிடமுடியும் என்பதையும்;

(iii) சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளையின் பிரகாரம் 2016.09.21 ஆம் திகதி அனைத்து சுங்கப் பரிசோதனைகளையும் தற்காலிகமாக இடைநிறுத்தியமையினால் நாடு பெருந்தொகையான வருமானத்தை இழந்துள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், (ஆ)(iii) இல் குறிப்பிடப்பட்ட கட்டளையை செல்லுபடியற்றதாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2018 திசெம்பர் 06, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

202/ '18

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2015.01.09 ஆம் திகதி தொடக்கம் 2017.11.30 ஆம் திகதி வரை ஐக்கிய அமெரிக்க டொலருக்கு ஒப்பீட்டளவில் இலங்கை ரூபாயின் மதிப்பிறக்கப் பெறுமதி யாதென்பதையும்;

(ii) மேற்குறித்த காலப் பகுதியில் ரூபாவின் மதிப்பிறக்கம் காரணமாக அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் சுமை அதிகரித்துள்ள அளவு எத்தனை ரூபா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

563/ '18

கௌரவ அசோக்க பிரியந்த,— மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அண்மையில் கலைக்கப்பட்ட வடமேல் மாகாண முதலமைச்சரின் கீழ் உள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் பெயர் மற்றும் முகவரி யாது;

(iii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் வடமேல் மாகாணசபையின் முதலமைச்சரின் கீழ் நிருவகிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களின் பெயர்கள் மற்றும் ஆட்சேர்க்கப்பட்ட பதவிகளை வெவ்வேறாக குறிப்பிடுவாரா:

(v) அவ்வாறு ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு மாகாணசபை பின்பற்றியுள்ள முறையியல் யாது;

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

578/ '18

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கைக்கு பால்மா இறக்குமதி செய்யப்படுவதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு ஆண்டு அடிப்படையில், தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) இலங்கைக்கு பால்மா இறக்குமதி செய்யும் நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் உற்பத்திகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1365/ '18

கௌர சுனில் ஹந்துன்னெத்தி,— தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முத்திரைகள் வெளியிடப்பட்டு, காலம் கடந்த பின் இம்முத்திரைகளின் சந்தைப் பெறுமதி முக பெறுமதியை விட அதிகமாகுமென்பதையும்;

(ii) மேற்படி முத்திரைகளை விற்பனை செய்த பெருமளவு வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியுமென்பதையும்;

(iii) எனவே இவ்வாறான முத்திரைகள் பற்றி காலப்பொருத்தமான ரீதியிலான கணக்காய்வு செய்ய வேண்டுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இவ்வாறு பழைய முத்திரை கையிருப்பு தபால் திணைக்களத்திடம் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனின், இக்கையிருப்பு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி முத்திரைகள் இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) தபால் திணைக்களத்திடம் இருக்க வேண்டிய இம்முத்திரை இருப்பு தற்போது இருக்கும் இடம் யாதென்பதையும்;

(v) இம்முத்திரைகள் வேறு நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டிருப்பின் இதற்கு காரணம் யாதென்பதையும்;

(vi) மேற்படி முத்திரைகளை விற்பனை செய்து வருமானத்தை பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(vii) ஆமெனின், மேற்படி வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1385/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான போப்பிட்டிய தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1454/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மகாவலி கங்கை கடலில் சங்கமிக்கும் இடத்திலுள்ள மூன்று பாலங்களில் உப்பாறு பாலத்தின் அடியில் கடல் அலைகளால் இயற்கையாக உருவாகியுள்ள மணல் மேட்டினை நீக்குவதற்கு தனியார் வர்த்தகர் ஒருவருக்கு அனுமதிப்பத்திரம் எவருடைய விதப்புரையின் பேரில் யாரால் வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) உப்பாறு பாலத்தின் தாங்கு தூண்களுக்கு அருகில் படிந்துள்ள கடல் மற்றும் ஆற்று மணல் திடலை நீக்க வேண்டுமென புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப்பணியகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இவ்வாறு மணலை நீக்குவதனால் உப்பாறு பாலத்தின் தாங்கு தூண்களுக்கு அல்லது நீடித்த தன்மைக்கு பாதிப்பு ஏற்படாதென உறுதி அளிக்கப்படுமா என்பதையும்;

(iii) இவ்விடத்திலிருந்து அகழ்ந்தெடுக்கப்படும் மணலை நேரடியாக நிர்மாண வேலைகளுக்கு பயன்படுத்த அங்கீகரிக்க முடியுமா என்பதையும்;

(iv) மேற்படி மணல் திடலை நீக்குவதனால் ஆற்று நீர் குறைந்த காலத்தில் ஆற்று நீரும் கடல் நீரும் கலப்பதால் நிதமும் மகாவலி கங்கை நீரில் கடல்நீர் கலக்கும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) இப்பாலத்தின் அடியில் மணல் அகழ்வு தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1414/ '18

கௌரவ காமினி லொக்குகே,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சுவீகரிக்கப்பட்டுள்ள மஹரகம பிரதேச செயலாளர் பிரிவின், பன்னிபிட்டிய கிராம அலுவலர் பிரிவில் அமைந்தள்ள ஜின்ஸரஹேனவத்த எனும் காணி மற்றும் கொட்டாவ கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள குலஹேனவத்த எனும் காணியின் அளவைகள் தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மேற்படி காணிகளின் ஒரு பர்சஸின் விலைமதிப்புப் பெறுமதி தனித்தனியே யாது என்பதையும்;

(iii) தற்போது மேற்படி காணிகள் வீடுகளை நிர்மாணிப்பதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு அல்லது நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி காணிகளின் ஒரு பர்சஸின் விற்பனை விலை தனித்தனியே யாது என்பதையும்;

(v) மேற்படி காணிகளை தனியார் துறைக்கு விற்பனை செய்யும் போது சந்தைப் பெறுமதி பற்றிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) மேற்படி காணிகளில் நிர்மாணிக்கப்படுகின்ற வீடுகளை விற்பனை செய்யும் விலைகள் தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1425/ '18

கௌரவ மயந்த திசாநாயக்க,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் பொதுமக்களின் அவசியப்பாடுகளுக்காக அரசாங்க அலுவலகங்களில் உத்தியோகத்தர்களை சந்திப்பதற்காக வாரந்தோறும் திட்டவட்டமான அலுவலகத் தினமொன்று அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளதா;

(ii) இந்த அலுவலகத் தினம் சம்பந்தமான சுற்றிக்கையொன்று வெளியிடப்பட்டிருப்பின் அது யாது;

(iii) அலுவலகத் தினமொன்று பிரகடனஞ் செய்யப்பட்டிருப்பின் அத்தினத்தில் பதவியணிக் கூட்டங்களையும் வேறு கூட்டங்களையும் நடாத்துவதால் பொதுமக்களுக்கு எதிர்நோக்க நேரிடுகின்ற சிரமங்கள் சம்பந்தமாக பரிகாரங்கள் நடைமுறையில் உள்ளனவா;

(iv) திட்டவட்டமான அலுவலகத் தினங்களில் பிரதேச மற்றும் மாவட்ட உயர் உத்தியோகத்தர்கள் கொழும்பிலுள்ள தலைமையகங்களுக்கு அழைக்கப்படுகின்றனரா;

(v) ஆமெனில் அத்தகைய தினங்களில் பொதுமக்களின் அவசியப்பாடுகளை ஈடேற்றுவதற்காக அமுலாக்கப்படுகின்ற திட்டங்கள் யாவை;

(vi) பொதுமக்களுக்காக மிகவும் பயனுறுதிமிக்க அரச சேவையொன்றினை ஈடேற்றுவதற்கான புதிய திட்டங்கள் அமுலில் உள்ளனவா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

---

## 2018 திசெம்பர் 07, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

154/ '18

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் காரணமாக பெருந்தொகையானவர்களின் வீடுகளுக்கு சேதமேற்பட்டுள்ளதென்பதையும்;

(ii) அவ்வாறு வீடுகள் சேதமடைந்த குழுவைச் சேர்ந்தவர்களில் 220 பேருக்கு தமது வீடுகளை கைவிட்டுச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு வீடுகளை கைவிட்டுச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டுள்ள வீட்டுச் உரிமையாளர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவை;

(ii) வீடுகளை கைவிட்டுச் செல்ல முன்னர் அவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் இற்றைவரை ஈடேறவில்லை என்பதை அறிவாரா;

(iii) பாதிக்கப்பட்ட ஏறக்குறைய 220 வீட்டுச் உரிமையாளர்களின் சிக்கலைத் தீர்க்க அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

402/ ’18

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தென் அதிவேக வீதி மூலமாக கிடைக்கப்பெறும் மாதாந்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வருமானத்தை வைப்பிலிடுவதற்காக, அதிவேக வீதிக்கே உரித்தான கணக்கொன்று பேணப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அக்கணக்கின் மொத்த மீதி எவ்வளவென்பதையும்;

(iv) 2017 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்திலோ அல்லது அண்மித்த காலத்திலோ அக்கணக்கிலிருந்து எதேனுமொரு பணத்தொகை அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அத்தொகை எவ்வளவென்பதையும்;

(vi) வைப்புப் பணத்திலிருந்து இவ்வளவு பணத்தொகையை பெறுவதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

525/ ’18

கௌரவ இந்திக்க அனுருத்த ஹேரத்,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட்ட பதவியணியின் எண்ணிக்கை யாது;

(ii) 2014.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு தேசிய வீடமைப்பு அதிகாரசபையில் பணிபுரியும் நிரந்தர, அமய, விசேட கருத்திட்ட மற்றும் பயிலுனர் பணியாட்டொகுதி எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) 2017.09.30 ஆம் திகதியன்று உள்ளவாறு தேசிய வீடமைப்பு அதிகார சபையில் பணிபுரியும் நிரந்தர, அமய, விசேட கருத்திட்ட மற்றும் பயிலுனர் பணியாட்டொகுதி எண்ணிக்கை வெவ்வேறாக யாது ;

(iv) 2017.09.30 ஆம் திகதியன்று உள்ளவாறு குறிப்பிட்ட ஒவ்வொரு பணியாட்டொகுதியிலும் பணிபுரிபவர்களின் பெயர், முகவரி, வதியும் கிராம அலுவலர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு ஆகியவை உள்ளடங்கிய ஆவணமொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

1109/ ’18

கௌரவ விஜித ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வத்தளை பிரதேச செயலாளரினால் வத்தளை பிரதேச செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட கல்உடுபிட்ட அரச கட்டடத்துக்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கட்டடம் என்ன நடவடிக்கைக்காக நிர்மாணிக்கப்பட்டதென்பதையும்;

(iii) அப் பிரதேச சிறுவர்கள் விளையாட்டு மைதானமாகப் பாவித்த ஏற்புடைய காணியில் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டமை விஞ்ஞானபூர்வ அடிப்படை ஒன்றின் பேரில் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iv) இன்றளவில் ஏற்புடைய கட்டடம் ஒரு பக்கத்துக்கு சாயத் தொடங்கியுள்ளது என்பதையும் யன்னல்கள், கதவுகள் மற்றும் ஏனைய பெறுமதியான பொருட்கள் அகற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளதென்பதையும் அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் இன்றளவில் நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும் எவ்வித பயன்பாட்டுக்கும் எடுக்கப்படாமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி கட்டடம் இன்றளவில் கவனிப்பாரின்றி காணப்படும் நிலை தொடர்பாக மேற்கொள்ளப்படும் ம் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1129/ '18

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கெரவலபிட்டி பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கன எரிபொருள் எண்ணெய் (HFO) மூலம் தற்சமயம் இயங்கும் மின்னுற்பத்தி நிலையத்தை ஓராண்டுக்குள் நீர்ம இயற்கை வாயு (LNG) மூலம் இயங்க வைப்பதற்கு இணக்கப்பாடு காணப்பட்டதா என்பதையும்;

(ii) இவ்விணக்கப்பாடு முறிந்துள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி இணக்கப்பாடு முறிந்தமையால் இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மின்னுற்பத்தி நிலையத்தினால் இலங்கை மின்சார சபைக்கு பெற்றுக் கொடுக்கப்படும் மின்சார அலகொன்றின் விலையை தீர்மானிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டுக்கு முரணாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதை அறிவாரா என்பதையும்;

(v) ஒப்பந்தத்தின் பிரகாரம் மின்சாரத்தை விநியோகிக்கும் நிறுவனம் செயற்படுவதை உறுதிபடுத்துவதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி இணக்கப்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1426/ ' 18

கௌரவ மயந்த திசாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டும் மொத்த வயல் காணிகளின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) அவற்றில் தற்போது நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள வயல் காணிகளின் பரப்பளவு யாதென்பதையும்;

(iii) இலங்கையிலுள்ள கைவிடப்பட்டுள்ள வயல் காணிகளின் பரப்பளவு யாதென்பதையும்;

(iv) அக்காணிகளில் பயிர் செய்கைக்கான துரித திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(v) நெற் செய்கைக்குத் தேவையான விதை மற்றும் உரம் உரிய முறையில் தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) நெல் கொள்வனவுக்காக தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நெற் செய்கைக்காக இளம் சந்ததியினர் முன்வராமையினால் நிலவுகின்ற தொழிற்படை பற்றாக்குறை தொடர்பாக ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) நெற் செய்கைக்கு தேவைப்படும் இயந்திர சாதனங்கள் வசதியாக சலுகை விலைக்கு பெற்றுத்தர திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இளம் சந்ததியினரை கமத்தொழிலில் ஈடுபடுத்த கவர்ச்சியான திட்டமொன்று செயற்படுத்தப்படுமெனில், அது யாதென்பதையும்;

(iv) கமத்தொழிலாளரின் பிள்ளைகளுக்கு கமத்தொழில் துறையில் வேலை வாய்ப்புகள் பெற்றுத்தர விசேட திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1437/ '18

கௌரவ அ. அரவிந்த் குமார்,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குரிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி உதவிகளைப் பெற்ற கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது பொருட்களுக்கான அனுப்பற் கட்டளை பிறப்பிப்பதற்காகவும் தரப் பரிசோதனை மேற்கொள்வதற்காகவும் உத்தியோகத்தர்கள் வெளிநாடு சென்ற சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட வெளிநாட்டு விஜயங்களுக்காக செலவிடப்பட்ட தொகையானது சபையின் அல்லது கருத்திட்டத்தின் செலவினத்தில் உள்ளடங்குகின்றதா என்பதையும்;

(ii) அது தொடர்பான சகல விபரங்களும் முன்வைக்கப்படுமா என்பதையும்;

(iii) அனுப்பற் கட்டளை பிறப்பிக்கப்பட்ட பொருட்களின் தரப் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர்கள் இடைக்கிடை வெளிநாடுகளுக்குச் செல்லும்போது அவர்களது சேவைகளையும் உள்ளடக்கிப் புரியப்பட்ட போதிலும் அதன் மூலம் இடம்பெறுகின்ற பெரும் நட்டத்தினைக் குறைத்துக் கொள்வதற்காக உரிய பொருட்களின் மாதிரிகளைத் தருவித்தல் அல்லது அப்பொருட்களை இலங்கைத் துறைமுக அதிகார சபைக்குத் தருவித்து தரப் பரிசோதனை நடவடிககைகளை மேற்கொள்வதற்காக கவனம் செலுத்தப்படுமா என்பதையும்;

(iv) இன்றேல், பொருட்களுக்கான தரப் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொருத்தமான வேறு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

1532/ ' 18

கௌரவ ஈ. சரவணபவன்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(i) கடந்த 1999.05.07 இல் வேலையற்ற பட்டதாரிகள் நியமனத்தின் போது சேவைப்பிரமாணக் குறிப்பு முன்வைக்கப்பட்டதா என்பதையும்;

(ii) இதன் பின்னர் 2005 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் வேலையற்ற பட்டதாரிகளின் நியமனத்தின் போதும் சேவைப்பிரமாண குறிப்பு முன்வைக்கப்பட்டதா என்பதையும்;

(iii) பட்டதாரிகளுக்கு நிர்வாகம், திட்டமிடல், அபிவிருத்தி, சுற்றுலா மற்றும் ஏனைய துறைகளில் பதில் தர / இரண்டாந்தர நிர்வாகிகளாக பதவித்தரம் வழங்கி ஏன் அவர்களை வலுச்சேர்க்க முடியவில்லை என்பதையும்;

(iv) “அபிவிருத்தி உதவியாளர்” என்ற பதவியை மட்டும் பட்டதாரிகளுக்கு வழங்கி அடுத்த பதவியுயர்வு, அடுத்த நிறைவேற்று அதிகாரப் பதவி என்பன பற்றி எதுவும் குறிப்பிடாது ஏன் என்பதையும்;

(v) விசேடமாக மாகாண சபைகளின் கீழ் வருகின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கு பட்டதாரி உதவி நிர்வாகிகளை / பட்டதாரி நிர்வாக அதிகாரிகளை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்காது அவர்களை வலுச் சேர்க்காது எவ்வாறு உள்ளூராட்சி மன்றங்கள் விருத்தி செய்யப்பட முடியும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2018 திசெம்பர் 08, சனிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

60/ ’18

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் முன்மொழிவு இலக்கம் 211 இன் பிரகாரம் ரிப்பில் சுப்பர் பொசுபேற்று (T.S.P.) உற்பத்தியின் பொருட்டு தனியார் துறையை ஊக்குவிப்பதற்காக பின்பற்றப்பட்ட நடவடிக்கைமுறை யாதென்பதையும்;

(ii) இலங்கையின் பொசுபேற்றுப் படிமத்தின் சாத்திய வள கற்கை தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) இன்றேல், ஏன் என்பதையும்;

(iv) 1990 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அரச துறையினால் பொசுபேற்று உற்பத்திக்காக வழங்கப்பட்ட பங்களிப்பு வருட அடிப்படையில் யாதென்பதையும்;

(v) அரச துறையின் மூலம் பொசுபேற்று உற்பத்திக்காக வழங்கிய பங்களிப்பின் ஊடாக பசளை இறக்குமதி செய்வதற்காகச் செல்லும் செலவு (வருடாந்தம்) எந்த அளவில் குறைத்துக்கொள்ளப்பட்டுள்ளதென்பதையும்;

(vi) இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் தற்போது அடையப்பெற்றுள்ள அனுகூலங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

292/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இரத்தினபுரி மாவட்டத்தில், வெலிகெபொல பிரதேச செயலாளர் பிரிவில், அம்பெவில சந்தியிலிருந்து ரங்வல ஊடாக செல்கின்ற உடவெல வீதியானது பல வருட காலமாக திருத்தப்படாமையின் காரணமாக கடுமையாக சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதி உரித்தாகும் நிறுவனம் யாது;

(ii) மேற்படி வீதியை போக்குவரத்துக்கு உகந்த வகையில் திருத்தியமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், திருத்தியமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி மற்றும் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது;

(iv) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை யாது;

(v) தற்போது மேற்படி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

538/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2017 ஏப்பிரல் மாதத்தில் கொஹுவல நகரில் ச.தொ.ச கிளையொன்று திறக்கப்பட்டதென்பதையும் இதில் அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டார் என்பதையும் அவர் ஏற்றுக்கொள்வாரா;

(ii) மேற்படி ச.தொ.ச. கிளையினால் விநியோகிக்கப்பட்ட சகல பற்றுச்சீட்டுக்களும் ஆங்கில மொழியில் மாத்திரம் அச்சிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா;

(iii) இதற்கு மேலதிகமாக இக்கிளையின் கணினி அலுவல்களுக்கான ஆலோசகராக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரித்தானியர் ஒருவர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(iv) இதற்கான நிபுணத்துவ அறிவுடைய இலங்கையர்கள் போதிய அளவில் உள்ளபோது, வெளிநாட்டவர் ஒருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) ஆங்கில மொழியில் மாத்திரம் அச்சிடப்படும் பற்றுச் சீட்டுக்களை மும்மொழியிலும் அச்சிடுவதற்கும், கணினி அலுவல்களுக்காக இலங்கையர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

765/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— சமூக வலுவூட்டல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுர்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் "சமுர்த்தி சிப்தொர" புலமைப்பரிசில் எனும் பெயரில் ஒரு நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படுகின்றதா;

(ii) ஆமெனில், அந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள் யாவை;

(iii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை "சமுர்த்தி சிப்தொர" புலமைப்பரிசில் பெற்ற பதுளை மாவட்ட மாணவ, மாணவிகளின் பெயர்கள் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் படி வெவ்வேறாக யாவை;

(iv) எதிர்வரும் காலத்தில் தற்போதுள்ளதைவிட அதிக அளவிலான சிப்தொர புலமைப் பரிசில்களை பதுளை மாவட்டத்துக்கு வழங்க அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா

(ஆ) இன்றேல், ஏன்?

981/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தின், மகாவலி வலயத்திற்கு சொந்தமான கல்னேவ நகரம் இற்றைவரை எவ்வித அபிவிருத்தித் திட்டத்திலும் உள்ளடங்காததொரு நகரமாகும் என்பதையும்;

(ii) மிகவும் சனநெருக்கடிமிக்க நகரமாகிய இந்நகரம் தரமற்ற நிலைக்கு உள்ளாகியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) கல்னேவ நகரத்தை தரம்வாய்ந்த நகரமாக மாற்றுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1006/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நீர்ப்பாசன, நீர் வளங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் புனரமைக்கப்பட்ட சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசனக் கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு புனரமைப்புப் பணிக்காகவும் மதிப்பிடப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்புடையதான புனரமைப்புப் பணிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான சாத்தியவள ஆய்வு, சுற்றாடல் மற்றும் பொறியியல் அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி புனரமைப்புப் பணிகளின் போது அகற்றப்பட்ட வண்டல் படிவு, மண் அல்லது மணலுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(viii) ஆமெனில், அக் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்களின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1453/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் கென்கே பாலத்திற்கு இருமருங்கிலுமான உப்பாறு மற்றும் இரால்குழி ஆகிய இரு பாலங்களும் மகாவலி கங்கையின் கிளை நீரோட்டங்களின் மீது அமைந்துள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கிளையாறான உப்பாறு மகாவலி கங்கையின் மடன்தெட்டிக்கு மேலாகவும், இரால்குழி கிளையானது மணலாறு எனும் இடத்திலும் மகாவலி கங்கையுடன் கலக்கின்ற போதிலும், கென்கே களப்பின் கடல் நீர் மகாவலி கங்கையில் கலப்பதை தவிர்க்கும் முகமாக அமைந்துள்ள மணல் திட்டில் மணல் அகழ்வதற்கு பிரதேச செயலாளரின் விதப்புரையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள மணல் அகழ்வு உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி உரிமப்பத்திரதாரர்களின் பெயர், விலாசம் மற்றும் அங்கீகரிக்கப் பட்டுள்ள மணல் கியூப்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) 2016 யூன் மற்றும் 2018 மே மாதங்களில் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இரண்டு மதிப்பீட்டு அறிக்கைகளினதும் பிரதிகளைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) மேற்படி அறிக்கைகளின் விதப்புரைக்கு ஏற்ப, மணல் அகழ்வு உரிமப்பத்திரங் களை வழங்குவதில் காணப்படும் தடைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1497/ '18

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டிலோ அல்லது அண்மித்த காலத்திலோ லாஓஸ் குடியரசுக்கு வருகின்ற இலங்கையருக்கு விமான நிலைய வீசா (on arrival visa) வழங்க வேண்டாமென இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கோரிக்கை இராஜதந்திர ரீதியில் நியாயமானதா என்பதையும்;

(iv) இலங்கை அரசாங்கம் வேறு நாடுகளிடமும் இவ்வாறு கோரியுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நாடுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?